இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 10-10-2025

# 25 ஆண்டுகள் கழித்து இரண்டுதான் நினைவுக்கு வரும்!

குஜராத் மாநிலத்தின் முதல் அமைச்சர், இந்திய நாட்டின் பிரதமர் ஆகிய இரண்டு பதவிகளுக்கும் சேர்த்து அரசின் தலைமைப் பொறுப்பில் மாண்புமிகு நரேந்திர மோடி அவர்கள் இருபத்தைந்து ஆண்டுகள் இருந்து விட்டதாக விழா கொண்டாடப்படுகிறது. 'அரசின் தலைமைப் பொறுப்பில் 25 ஆண்டுகள்' என்று மகிழ்ச்சி அடைகிறார்கள்.

இதனையொட்டி பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டுள்ள அறிக்கை, தன்னைத் தானே மெச்சிக் கொள்வதாக அமைந்துள்ளது. 'உலகின் நம்பர் ஒன் நாடு இந்தியா' என்பதைத் தவிர அனைத்தும் இருக்கிறது அந்த அறிக்கையில்.

**இருபத்தைந்து ஆண்டுகள் கழித்து மோடி என்னவாக அடையாளம் காணப்படுவார் என்றால், குஜராத் மாநிலத்தில் நடைபெற்ற வன்முறைகளுக்காகவும், ஒன்றிய அரசின் பெரும்பாலான வசதிகளை அதானி குழுமத்துக்கு தாரை வார்த்ததற்காகவும்தான்.**

**2002 குஜராத் கலவரம் எத்தகைய கோரமானது என்பதை நாம் சொல்லத் தேவையில்லை, அவரது குருநாதர் அத்வானியே சொல்லி இருக்கிறார். மோடி மீது கோபம் ஆன காலத்தில் அல்ல, மோடி மீது நல்ல இணக்கமாக இருந்த காலத்தில் அத்வானி அவர்கள் ஒரு புத்தகம் எழுதினார்கள். 'என் தேசம் என் வாழ்க்கை' என்பது அதன் தலைப்பு. அந்தப் புத்தகம் தமிழிலும் வெளியாகி இருக்கிறது. இதில் குஜராத் கலவரம் குறித்து 831, 842 ஆகிய பக்கங்களில் எழுதி இருக்கிறார் அத்வானி அவர்கள்.**

**"அதுவரையில் நாட்டில் மதக்கலவரங்கள் வெகுவாகக் குறைத்திருக்கிறது என்று வாஜ்பாய் ஆட்சிக்குக் கிடைத்திருந்த பாராட்டை குஜராத் சம்பவங்கள் சீர்குலைக்கின்றன என்பதால் நான் மிகவும் சோர்வுற்றேன். குஜராத்தில் நடந்தது துரதிர்ஷ்டவசமான சம்பவம் ஆகும்" என்று சொல்லி விட்டு, அதில் இறந்தவர்கள் எத்தனை பேர் என்பதை நாடாளுமன்றத்தில் பட்டியல் போட்டதை அத்வானி அவர்கள் சொல்கிறார்கள். "குஜராத் வன்முறையில் 790 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். 254 இந்துக்கள் கொல்லப்பட்டனர். 223 பேர் காணவில்லை. சாவு எண்ணிக்கை பற்றிய தகவல் அதிகாரபூர்வமற்ற வகையில் அதிகமாக இருக்கக் கூடும் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்" என்கிறார். அப்போது அத்வானி, இந்திய நாட்டின் உள்துறை அமைச்சர்.**

**2002 ஏப்ரல் 4 ஆம் தேதி பிரதமர் வாஜ்பாய் குஜராத்திற்குச் சென்றார். "குஜராத் வன்முறை உலக நாடுகளின் பார்வையில் இந்தியாவின் அந்தஸ்தை மோசமாகப் பாதித்துவிட்டது. இங்கு இவை எல்லாம் நடந்த பிறகு, எந்த முகத்தோடு நான் வெளிநாடுகளுக்குப் போவேன் என்று எனக்குத் தெரியவில்லை. இந்த வெறிபிடித்த போக்கை நிறுத்தியாக வேண்டும்" என்று பிரதமர் வாஜ்பாய் பேசியதாக எழுதி இருக்கிறார் அத்வானி.**

முதலமைச்சர் மோடி பதவி விலக வேண்டும் என்று அப்போது கோரிக்கை எழுந்தது. பதவி விலகத் தேவையில்லை என்று உறுதியாக வாதிட்டுத் தடுத்தவர் அத்வானி. 'மோடியாவது ராஜினாமா செய்திருக்க முன்வந்திருக்க வேண்டும்' என்று பிரதமர் வாஜ்பாய் தன்னிடம் சொன்னதாக (பக்கம் 934) அத்வானி எழுதுகிறார். மோடியை அழைத்து, "ராஜினாமா செய்யுங்கள்" என்று தான் சொன்னதாக அத்வானி சொல்கிறார். கோவா தேசிய நிர்வாகக் குழுவில் இதனை மோடியும் ஒப்புக் கொண்டிருக்கிறார். 'எது எப்படி இருந்தாலும் ஆட்சிக்குத் தலைமை ஏற்றிருப்பவன் என்ற முறையில் என் மாநிலத்தில் நடந்த சம்பவங்களுக்குப் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். பதவியை ராஜினாமா செய்யத் தயாராக இருக்கிறேன்' என்று மோடி அக்கூட்டத்தில் சொல்லி இருக்கிறார். வரலாற்றில் இதுதான் பேசப்படும்.

பிரதமர் பதவிக்கு வந்த பிறகு தனிப்பட ஒரு குழுமத்துக்காக தனது பதவியைப் பயன்படுத்தி வருகிறார் என்ற குற்றச்சாட்டுக்கு இதுவரை மோடி பதில் அளிக்கவில்லை.

07.02.2023 அன்று அதானியும் மோடியும் இருக்கும் புகைப்படத்தைக் காட்டி நாடாளுமன்றத்தில் ராகுல் கடுமையாக விமர்சித்தார்.

**"2014 ஆம் ஆண்டு 8 பில்லியன் டாலராக இருந்த அதானியின் சொத்து மதிப்பு இப்போது 140 பில்லியன் ஆனது எப்படி? 2014ஆம் ஆண்டு உலகப் பணக்காரர்கள் பட்டியலில் 609 ஆவது இடத்தில் இருந்தவர், 2022ஆம் ஆண்டு இரண்டாவது இடத்தைப் பிடித்தது எப்படி? விமான நிலையம் என்றாலும் அதானிதான். துறைமுகம் என்றாலும் அதானிதான். முன் அனுபவம் இல்லாதவர்கள் விமான நிலைய மேம்பாட்டுத் திட்டத்தை மேற்கொள்ள இயலாது என்ற விதியைத் திருத்தினார்கள். அதானிக்கு 6 விமான நிலையங்கள் தரப்பட்டன. இஸ்ரேலுக்கு பிரதமர் செல்கிறார். அவருக்குப் பின்னாலேயே நடந்து அதானி செல்கிறார். உடனே இஸ்ரேல் - இந்தியா இடையிலான அனைத்து தொழில்துறை ஒப்பந்தங்களும் அதானிக்கு வந்து விடுகிறது. இதே போன்று ஆஸ்திரேலியாவுக்கு பிரதமர் செல்கிறார். உடனே மாயமந்திரமாக எஸ்.பி.ஐ. வங்கி அதானிக்கு 1 பில்லியன் டாலர் கடன் வழங்குகிறது. வங்கதேசத்திற்கு மோடி முதல் முறையாகச் செல்கிறார். அங்கு மின் விநியோகத்திற்கான திட்டம் முடிவாகிறது. சில நாட்களுக்குப் பின் வங்கதேசத்தின் மின்வாரியம் 25 ஆண்டுகளுக்கு மின் விநியோக உரிமையை அதானிக்கு வழங்குகிறது. 1500 மெகாவாட் மின்சார ஒப்பந்தம் அதானிக்குக் கிடைக்கிறது. இதுதான் உங்கள் வெளியுறவுக் கொள்கை" என்று நாடாளுமன்றத்தில் ராகுல் காந்தி குற்றம் சாட்டினார்.**

இதற்குப் பதில் அளிக்காத மோடி, 2024 தேர்தல் நடக்க இருக்கும் போது திடீரென அதானி பற்றிப் பேசினார்.

"அம்பானி, அதானியிடமிருந்து காங்கிரஸ் எவ்வளவு பணம் பெற்றது? எத்தனை வாகனங்களில் பணத்தைப் பெற்றது? ஏதோ ஒன்று நடந்திருப்பதாக நான் உணர்கிறேன்" என்று பேசினார். 'உங்களுக்கு இப்படித்தான் வந்ததா?' என்று திருப்பிக் கேட்டார் ராகுல்.

இந்திய நாடாளுமன்றம் ஒவ்வொரு முறையும் கூச்சலும் குழப்பமுமாக ஆவது அதானி விவகாரத்தில்தான். உலகின் பலநாட்டுப் பத்திரிக்கைகள் கிழிப்பது இந்தச் செய்தியை வைத்துத்தான். உலகின் பலநாடுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் அதானி. ஜூன் 2022ஆம் ஆண்டு இலங்கை காற்றாலை மின்உற்பத்தி உரிமத்தை அதானிக்கு வழங்க வேண்டும் என மோடி அழுத்தம் கொடுத்ததாக மகிந்த ராஜபட்சே சொன்னார்.

25 ஆண்டுகள் கழித்து நினைவுகூர இருப்பவை இவை இரண்டும்தான்.

• •



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (9.10.2025) கோயம்புத்தூர் அரசினர் கலைக் கல்லூரியில், கோயம்புத்தூர் சாலைப்பாதுகாப்பு மாதிரி நகர் திட்டம், கோயம்புத்தூர் மாவட்ட நிருவாகம், மாநகர காவல் மற்றும் உயிர் அமைப்பு இணைந்து நடத்திய நிகழ்ச்சியில், "நான் உயிர் காவலன் உறுதிமொழி" ஏற்கப்பட்டது. இந்நிகழ்வில், அமைச்சர்கள் எ.வ.வேலு, சு. முத்துசாமி, தா.மோ.அன்பரசன், மு.பெ.சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.செந்தில்பாலாஜி, ஈ.ஆர்.ஈஸ்வரன், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார், க. கிரியப்பனவர், கோயம்புத்தூர் மாநகர காவல் ஆணையர் ஆ. சரவண சுந்தர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், உயிர் அமைப்பின் நிருவாகிகள் பாலசுப்பிரமணியம், டாக்டர் ராஜசேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (9.10.2025) தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் சார்பில், கோயம்புத்தூர், கொடிசியா வர்த்தக வளாகத்தில் நடைபெற்ற "உலக புத்தொழில் மாநாடு 2025"ல், தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில் நிறுவனங்களுக்கு புதிய சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்துதல், உலகத்தரத்திலான தொழில் வளர்பயிற்சிகளை வழங்குதல் போன்றவற்றிற்காக, தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்திற்கும் பல்வேறு பன்னாட்டு நிறுவனங்களுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

## அனைவருக்கும் சுத்தமான குடிநீர்:

# குன்னம் தொகுதி முல்லையூரில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார்!

அரியலூர், அக்.10 -

அரியலூர் மாவட்டம், குன்னம் தொகுதி செந்துறை ஒன்றியம் முல்லையூர் மற்றும் உகந்த நாயக்கன் குடிக்காடு ஆகிய கிராமங்களில் அனைவருக்கும் சுத்தமான குடிநீர் வழங்க வேண்டும் என்பதை உறுதி செய்யும் திராவிட மாடல் அரசின் லட்சியப் பயணத்தில் மக்கள் சுகாதாரமான சுத்தமான குடிநீரை பயன்படுத்திக் கொள்ளும் வகையில் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் சமூக மேம்பாட்டு நீதியிலிருந்து அமைக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை போக்குவரத்து மற்றும் மின்சார துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் திறந்து வைத்து மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்.

பின்னர் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேசுகையில்,

முல்லையூர் கிராமத்தில் சாலை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் படிப்படியாக செய்யப்பட்டு வருகிறது மேலும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டும் என்ற இப்பகுதி பொதுமக்களின் கோரிக்கை இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. நம்முடைய பகுதியில் அதிகளவில் உள்ள சிமெண்ட் ஆலைகளின் சுண்ணாம்புக்கல் சுரங்கங்களால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்துள்ளதோடு குடிநீரின் தன்மையும் மாறி உள்ளது. இதனாலேயே குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டு வருகிறது.

அண்மையில் செந்துறை ஒன்றியத்தின் சில பகுதிகளில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன்மூலம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தடை உள்ளதால் இதுபோன்ற நிறுவனங்களின் சமூக மேம்பாட்டு நிதியிலிருந்து குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக தான் இன்று முல்லையூரில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதனை அமைத்து தந்த நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திற்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

1986 ஆம் ஆண்டு நான் பொறியியல் படித்த போது நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் இன்டர்ன்ஷிப்காக சென்றிருக்கிறேன் பின்னர் எம்.எல்.ஏ.வாகவும், அமைச்சராகவும் நிறுவனத்திற்கு சென்று வந்த நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்னை மின்சாரத் துறை அமைச்சராக நியமித்தபோது மின்சாரத் துறை அமைச்சர் என்ற முறையில் நான் இந்நிறுவனத்திற்கு சென்று வந்துள்ளது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.

இந்தியாவில் மிகச்சிறந்த நிறுவனமாக நெய்வேலி நிலக்கரி நிறுவனம் செயல்பட்டு வருகிறது. நெய்வேலி நிலக்கரி நிறுவனம் கடலூர் மாவட்டத்தில் பல்வேறு சமூக மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்தி வருவது போல் அரியலூர் மாவட்டத்திலும் பல்வேறு சமூக மேம்பாட்டு பணிகளை செய்ய வேண்டும் என நிறுவனத்திற்கு நான் கோரிக்கை வைக்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் குறிப்பாக 'மகளிர் உரிமைத் தொகை திட்டம்' எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் 'மகளிர் விடியல் பயணம் திட்டம்', 'காலை உணவு திட்டம்' என சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தை பார்த்து மற்ற மாநிலங்களிலும் இத்திட்டத்தை பின்பற்றும் நிலை உள்ளது. மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக தமிழ்நாடு முதலமைச்சரின் திட்டங்கள் அமைந்துள்ளது என பெருமிதத்துடன் கூறினார்.

## மத்திய கிழக்கை நோக்கி

# எங்கள் வெள்ளைப்புறா!



காசாவில் நிகழும்
இனப்படுகொலைகளுக்கு எதிராகத்
தமிழ்நாடு சட்டமன்றத்தில்
தீர்மானம் நிறைவேற்றப்படும்
என்பது ஒரு நற்செய்தியாகும்;
நம்பிக்கை தருவதாகும்

காசாவின்
உலர்ந்த வானத்தில் பெய்யும்
தமிழ்நாட்டு மழையாகும்

முதலமைச்சர்
மு.க.ஸ்டாலின் அவர்களின்
மனிதாபிமானத்தை
மனம் உள்ளவர்களெல்லாம்
பாராட்டுவார்கள்

காசா ஒரு சிறு பகுதிதான்

41 கி.மீ நீளமும்
10 கி. மீ அகலமும் கொண்ட
ஓர் ஒட்டு நிலம்தான்



ஆனால்,
தண்ணீர் இல்லாத
அந்தப் பாலை நிலத்தில்
ரத்த ஊற்று பீறிடுகிறது


உலகத்தின் கண்களில் விழுந்த
கந்தகத் தூளாக
அது உறுத்திக்கொண்டே இருக்கிறது
முதலில் அந்த மக்கள்
உயிரோடு இருக்க வேண்டும்

இந்தத் தீர்மானம்
சர்வதேசச் சமூகத்தின் மீது
தமிழ்நாடு சட்டமன்றம் காட்டும்
அன்பென்றும் அக்கறையென்றும்
போற்றப்படும்

தீப்பிடித்த வீட்டில்
ஆளுக்கொரு குடம் தண்ணீர்
அள்ளி இறைப்பதுபோல
அனைத்துக் கட்சிகளும்
இந்தத் தீர்மானத்தை
ஆதரிக்கும் என்று நம்புகிறோம்

இது
உலக சமாதானத்துக்கு
எங்கள் பங்கு

மத்திய கிழக்கை நோக்கி
எங்கள் வெள்ளைப் புறா



- கவிப்பேரரசு வைரமுத்து